# அதிகரித்து வரும் நவீன ஊடகங்களும் மாணவர்களின் கற்றல் விளைவுகளும்

**ஜெ. இராசநாயகம்**

கல்வியியற்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை
luxmy2001@yahoo.com

**சுருக்கம்:** கல்வியின் மூலம் சமூகத்திலே நாளாந்தம் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்களில் நவீன ஊடகங்களின் பங்களிப்பு மகத்தானது. நவீன ஊடகங்களின் வருகையால் மாணவர்களின் கற்றலில் பல விளைவுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. சமூகத்தின் செய்திப் பரிமாற்றங்களுக்கும் தொடர்பாடலுக்கும் முக்கிய தளமாக விளங்கும் ஊடகங்களின் உள்ளடக்க செயலொழுங்கும் நோக்கமும் கல்விக்கு முக்கிய இடம் கொடுக்கின்றன. இவ்வகையில் அதிகரித்துவரும் நவீன ஊடகங்களும் அவற்றின் செயல் ஒழுங்கும், மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் விளைவுகளை முன்வைத்தலே இந்த ஆய்வின் நோக்கமாகும். தகவல் பெறுகை, தகவலைத் தீர்மானித்தல், ஏற்றுக் கொள்ளுதல், தவிர்த்தல், தொடர்புபடுத்தல், பரிமாற்றுதல், பொருத்தமான வகையில் பயன்படுத்துதல் போன்ற பலவிதமான செயற்பாடுகளை உள்ளடக்கிய நவீன ஊடகங்கள் இன்றைய கல்வியுலகில் மிகப்பெரிய மாறுதல்களுக்கு எல்லாம் வகை கூறும் நிலையில் அமைந்துள்ளன. இன்றைய நவீன உலகில் இணையத்தளங்கள், இன்ரநெற், கைபேசி, ருவிற்றர், ஈமெயில் போன்ற ஊடகங்கள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கும் புதிய செல்நெறிகளை அமைத்துக் கொடுத்துள்ளன. எனினும், அத்தகைய ஊடகங்களை எப்படி? எப்போது? எவ்வாறு? கையாள்வது என்ற வரையறை தெரியாத பெற்றோர்கள், மாணவ சமுதாயங்களினால் நவீன ஊடகங்கள் மேல் இன்று கல்வியியலாளர்கள் தொடக்கம் சாதாரண பாமர மக்கள் வரை குற்றம் சுமத்துகின்றார்கள். எனினும் இலாப நோக்கம் என்னும் குறுகிய நோக்கில் செயற்படும்போது எமது கலாச்சாரத்துக்குப் பொருந்தாத சில தகவல்களையும் வழங்கி இன்றைய பதின்ம வயது மாணவர்களைத் தவறாக வழி நடத்துகின்றன என்ற குற்றச்சாட்டையும் நவீன ஊடகங்கள் ஏற்கத்தான் வேண்டும். இதனை மேலெழுந்த வாரியாகக் கூறாது ஆய்வு மூலம் தகவல்கள் பெற்று உண்மையை வெளிப்படுத்துதல் சிறப்பானது என்ற வகையில் ஆய்வுக் குடித்தொகை தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டு உண்மைத்தன்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.